திருப்பத்தூர் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 1484 /அ3/2021 நாள்:05.08.2021

ஐயா / அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 – 2020–2021–ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – பள்ளி மாணாக்கரின் தேர்வெண்களுடன் கூடிய பெயர்பட்டியலை பதிவிறக்கம் செய்தல் மற்றும் திருத்தம் மேற்கொள்ளுதல் – அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட செயல்முறைகள், நாள்.27.01.2021.
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள்.05.02.2021.
3. இவ்வலுவலகக் கடிதங்கள் ந.க.எண். 086254/எப்1/2020, நாள்.10.02.2021 மற்றும் 11.02.2021.

-------

அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும், 2020–2021 கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு தொடர்பான தேர்வெண்களுடன் கூடிய பெயர்பட்டியலை பதிவிறக்கம் செய்து திருத்தம் மேற்கொள்வது தொடர்பாக பின்வரும் அறிவுரைகளை கவனமாக செயல்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும், தாங்கள் இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்த விவரங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட 2020–2021 கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பயின்ற பள்ளி மாணவர்களுக்கு

தேர்வெண்கள் ஒதுக்கீடு செய்யப்பட்ட பெயர்ப்பட்டியலை, **05.08.2021** பிற்பகல் முதல் **07.08.2021** வரையிலான நாட்களில் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று School login வழியாக பதிவிறக்கம் செய்து, பின்வரும் பணிகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

2. இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்யப்பட்ட பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு மாணவர்களின் பெயர்ப்பட்டியலில் உள்ள ஒவ்வொரு மாணவரது பெயர் (தமிழ் மற்றும் ஆங்கிலம்), பிறந்த தேதி, புகைப்படம், பயிற்று மொழி, பாடத்தொகுப்பு (11ஆம் வகுப்பிற்கு மட்டும்), மொழிப்பாடம் மற்றும் தந்தை/ தாயார் / பாதுகாவலர் பெயர் (தமிழ் மற்றும் ஆங்கிலம் ) உள்ளிட்ட விவரங்கள் அனைத்தும் பள்ளி ஆவணங்களின்படி சரியாக உள்ளனவா என்பதை சம்பந்தப்பட்ட வகுப்பாசிரியர் மற்றும் பள்ளித் தலைமையாசிரியர் ஆகியோர் சரிபார்க்க வேண்டும். மேலும், தங்களது பள்ளி மாணவர்கள் அனைவரது பெயரும் பெயர்ப்பட்டியலில் இடம் பெற்றிருப்பதை பள்ளித் தலைமையாசிரியர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

3. ஏற்கனவே EMIS portal–ல் இருந்து மாணவர் விவரங்களை pull செய்த பிறகு, Apply option–ஐ பயன்படுத்தி பெயரை சேர்க்கத் தவறிய காரணத்தால், மாணவரது பெயர் பெயர்பட்டியலில் விடுபட்டிருப்பின், அவ்வகை மாணவரது பெயரை Apply option-I பயன்படுத்தி மாணவரது விவரங்களை சரிபார்த்து உறுதி மொழிப்படிவத்தினை (Declaration form) பதிவிறக்கம் செய்து கொள்ளவேண்டும். அம்மாணவரது பெயருடன் கூடிய புதிய பெயர்பட்டியலை **09.08.2021** அன்று பிற்பகல் பள்ளித் தலைமையாசிரியர் இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

4. வேறு பள்ளியின் பெயர்பட்டியலில் இடம்பெற்றுள்ள மாணவர், தற்போது தங்கள் பள்ளியில் சேர்ந்து (Transfer cases) பயின்று வந்தால், அம்மாணவரின் பெயர்,

தேர்வெண் (Roll Number), EMIS Number மற்றும் தற்போது பயிலும் பள்ளியின் UDISE code ஆகிய விவரங்களை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடம் 07.08.2021 தேதிக்குள் ஒப்படைக்கவேண்டும்.

5. 2020 – 2021 ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு / பதினோராம் வகுப்பு பெயர்பட்டியலில் இறந்த மாணவரது பெயர் இடம் பெற்றிருப்பின், அம்மாணவரது பெயரை Delete option–ஐ பயன்படுத்தி பெயர்பட்டியலில் இருந்து நீக்கம் செய்தல் வேண்டும்.

6. அனைத்து மாணவர்களின் விவரங்களையும் சரிபார்த்தபின், பெயர்பட்டியலில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், உடன் அத்திருத்தங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

7. மேற்குறிப்பிட்ட அனைத்துப் பணிகளையும் 05.08.2021 பிற்பகல் முதல் 07.08.2021 வரையிலான நாட்களிலேயே செய்து முடித்தல் வேண்டும்.

8. 2020 – 2021 ஆம் கல்வியாண்டிற்கான பெயர்பட்டியலில் திருத்தம் மேற்கொள்வதற்கு வழங்கப்படும் இந்த இறுதி வாய்ப்பை பயன்படுத்தி, பள்ளித் தலைமையாசிரியர்கள் திருத்தங்களை மேற்கொள்ளவேண்டும்.

9. தேர்வர்களது நலன் கருதி, பிழைகளற்ற மதிப்பெண் சான்றிதழ்கள் அச்சிடுவதற்காக வழங்கப்படும் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளாமல் மதிப்பெண் சான்றிதழ் அச்சிட்டு வழங்கப்பட்ட பிறகு, சான்றிதழில் திருத்தம் செய்யக் கோரி பள்ளித் தலைமையாசிரியர்கள் இவ்வலுவலகத்திற்கு மனுக்கள் அனுப்புதல் கூடாது.

ஒம்/–
மாவட்டக் கல்வி அலுவலர்
திருப்பத்தூர் மாவட்டம்